பக்கங்கள் 17 + 08

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு


## மொட்டுவில் களமிறங்க ரணில் விரும்பினால் ஆதரவு வழங்குவோம்



### நாமல் கூறுகின்றார்

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மொட்டு சின்னத்தின் கீழ் களமிறங்க விரும்பினால் அது தொடர்பான 04▶


முழக்கம்: 02 வள்ளுவ ஆண்டு 2055 ஆடி 16 வியாழக்கிழமை 01.08.2024 அதிர்வு 01


## யாழ். நெடுந்தீவுக் கடற்பரப்பில்

# கடற்படையினரின் படகு மோதி தமிழக மீனவர் ஒருவர் மரணம்!

### மற்றொரு மீனவர் மாயம்; இரண்டு பேர் சிறைப்பிடிப்பு

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நெடுந்தீவுக் கடலில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட இந் திய மீனவர்களின் படகைச் சிறைப் 04▶







காலகதி பிசகாமல்
மாலை தோறும்
உங்களை நாடி வரும்
மாலை முரசுக்கு இன்று
முதல் ஆண்டு நிறைவு.
நாளை 2 ஆம் ஆண்டில்
அது கால் பதிக்கின்றது.
இச்சந்தர்ப்பத்தில் நம்முடன்
தோன்றாய்த் துணையாக
தோள் கொடுத்து நிற்கும்
நம் வாசகர்கள், ஆதரவாளர்கள்,
செய்தியாளர்கள், பத்தியாளர்கள்,
விளம்பரதாரர்கள் சகலரையும்
நன்றியுடன் நினைவு கூர்கின்றோம்.

- முரசு குழுமம் -



## கைதான மீனவர்களை உடன் விடுதலை செய்ய நடவடிக்கை எடுங்கள்!

### ஜெயசங்கருக்கு அண்ணாமலை அவசர கடிதம்

(எம்.கே.ஷாகுல் ஹமீது)

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப் படுகின்றமை மிகுந்த கவலையளிக் கின்றது என்றும், கைது செய்யப்பட்ட மீனவர்களை முன்கூட்டியே விடுதலை செய்ய இந்திய மத்திய வெளியுறவு அமைச்சகம் நடவடிக்கை 04▶



## இலங்கைத் தூதரை அழைத்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் கடும் கண்டனம்

(எம்.கே.ஷாகுல் ஹமீது)

இலங்கைக் கடற்படையின் கப்பல் மோதி தமிழக மீனவர் ஒருவர் உயிரிழந்த நிலையில் புதுடில்லியில் உள்ள இலங் கைத் தூதுவரை அழைத்து இந்திய மத்திய வெளி யுறவுத்துறை அமைச்சகம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மாயமாகியுள்ள மீனவரையும், 04▶


உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally





# ஊடகவியலாளர் நிலக்சனின் 17ஆம் ஆண்டு நினைவேந்தல்

(எஸ்.நிதர்ஷன்)

ஊடகவியலாளர் சகாதேவன் நிலக்சனின் 17ஆம் ஆண்டு நினை வேந்தல் நிகழ்வு இன்று நடைபெற்றது.

யாழ். ஊடக அமையத்தில் அமையத்தின் தலைவர் கு. செல்வக்குமார் தலைமையில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் நிலக்சனின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணியப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டு சுடரேற்றப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் ஊடக கற்கைக் மாணவனும், சாரளம் சஞ்சிகையின் ஆசிரியரும், தமிழ் மாணவர் ஒன்றியத்தின் யாழ். மாவட்ட முன்னாள் தலைவருமான சகாதேவன் நிலக்சன் 2007ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

அவரது வீட்டுக்கு அதிகாலை 5 மணியளவில் சென்ற ஆயுததாரிகள், நிலக்சனை வெளியே அழைத்து அவரது பெற்றோர் மற்றும் சகோதரன் முன்னிலையில் சுட்டுப் படுகொலை செய்துவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றனர்.
















மாலை முரசு
1
முதலாவது ஆண்டு நிறைவு
01.08.2024
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
Bonding Tamils Globally

# ஐஸ் போதைப்பொருளுடன் கைதான தாய், மகனிடம் விசாரணை முன்னெடுப்பு

(பாறுக் ஷிஹான்)

ஐஸ் போதைப்பொருளுடன் கைதான தாய் மற்றும் மகன் உள்ளிட்டோரிடம் மேலதிக விசாரணைகளை இறக்காமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம், இறக்காமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரிப்பத்தான் சேனை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை ஐஸ் போதைப்பொருளுடன் தாயும் மகனும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இறக்காமம் விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இறக்காமம் பொலிஸ் பெறுப்பதிகாரி ஜே. எம். மஹிந்த சேனரத்ன வழிகாட்டலுக்கு அமைவாக விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரி ஜே.எம். பி.கலந்தசூரிய தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது 6 மில்லி 200 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர்களான தாய் மற்றும் மகன் கைது செய்யப்பட்டிருந்தனர்.




அத்துடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இறக்காமம் பொலிஸ் நிலையத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன் அம்பாறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையும் குறிப் பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மொட்டுவில்...

யோசனை அரசியல் குழுவில் முன்வைக்கப்படும்." – என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளரான நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவித்தார்.

சில அரசியல்வாதிகளின் நடத்தையைப் பார்க்கின்றபோது மக்களுக்கு அரசியல்வாதிகள் மீது வெறுப்பு வருவதே நியாயம்தான் என்றே எண்ணத் தோன்றுகின்றது என்றும் நாமல் குறிப்பிட்டார்.

"ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நான் தனிப்பட்ட ரீதியில் முடிவுகளை எடுக்கவில்லை. கட்சி எடுத்த முடிவின் பிரகாரமே செயற்படுகின்றேன். எமக்கு மக்களுடன்தான் கொடுக்கல் – வாங்கல் உள்ளது. கடைசியில் ஒருவர் மிஞ்சினால்கூட கட்சியின் கொள்கையின் பிரகாரமே செயற்படுவேன்." – என்றார்.

### இலங்கைத்...

கைதாகியுள்ள இரு மீனவர்களையும் மீட்டுத் தருமாறு அவர்களின் உறவினர்கள், இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்திடம் கண்ணீருடன் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### கடற்படையினரின்...

பிடிக்க முயன்ற இலங்கைக் கடற்படையினரின் படகு மோதியதில் தமிழக மீனவர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் ஒரு மீனவர் காணாமல்போயுள்ளார்.

அதேவேளை, இந்த விபத்தில் அகப்பட்ட படகில் இருந்த இரண்டு தமிழக மீனவர்கள் சிறைப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த தமிழக மீனவரின் சடலம் புங்குடுதீவு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட இரண்டு தமிழக மீனவர்களையும் கடற்படையினர் தடுத்து வைத்துள்ளதுடன் காணாமல்போன மீனவரையும் தேடி வருகின்றனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து தமிழகம் – இராமேஸ்வரத்தில் பெரும் பதற்றம் நிலவுகின்றது. அங்குள்ள மீனவர்கள் வீதியை மறித்து இலங்கை அரசு மற்றும் இலங்கைக் கடற்படையினருக்கு எதிராகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

### கைதான...

எடுக்க வேண்டும் என்று இந்திய மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை கடிதம் எழுதியுள்ளார்.

நெடுந்தீவு அருகே தமிழக மீனவர்கள் படகு மீது இலங்கைக் காற்படையின் ரோந்து கப்பல் மோதியதில் ஒரு மீனவர் உயிரிழந்தார். 2 மீனவர்களை இலங்கைக் கடற்படை கைது செய்துள்ளது. மேலும், மாயமான மற்றொரு மீனவரைத் தேடும் பணி நடைபெற்று வருகின்றது. இந்தச் சம்பவம் தமிழக மீனவர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், இந்தச் சம்பவம் குறித்து மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு தமிழக பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை கடிதம் எழுதியுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:–


"இலங்கைக் கடற்படையால் ஆழ கடலில் தமிழக மீனவர்கள் தாக்கப்பட்டதை உங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகின்றோம். நேற்று 359 மீன்பிடிக் கப்பல்கள் அனுமதிச் சீட்டு பெற்று கடலுக்குள் சென்றன. நெடுந்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, இலங்கைக் கடற்படையினரால் தடுத்து நிறுத்தப் பட்டபோது, அவர்களது படகு மீன்பிடிக் கப்பல் ஒன்றின் மீது மோதியது.

இந்தச் சம்பவத்தின் போது கப்பலில் இருந்த 4 மீனவர்களில் ஒரு மீனவர் துரதிஷ்டவசமாக உயிரிழந்தார், ஒரு மீனவர் காணாமல்போயுள்ளார், மேலும் இரு மீனவர்களை இலங்கைக் கடற்படை கைது செய்துள்ளது.

சமீபகாலமாக இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவது மிகுந்த கவலையளிக்கின்றது.

நேற்று புதன்கிழமை நடந்த சோகமான சம்பவம், நமது மீனவர்களில் ஒருவரின் மரணம் மற்றும் மேலும் இருவர் கைது செய்யப்பட்டமை, உங்கள் தலையீட்டின் அவசரத் தேவையை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

காணாமல்போன தமிழக மீனவரை உடனடியாகக் கண்டுபிடிக்க இந்திய கடலோரக் காவல்படைக்கு உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கின்றோம். கைது செய்யப்பட்ட மீனவர்களை முன்கூட்டியே விடுதலை செய்ய இந்திய மத்திய வெளியுறவு அமைச்சகம் தலையீடுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்." – என்றுள்ளது.



EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கருக்கலைப்பு அனர்த்தம்

இலங்கையில் நாளொன்றுக்கு சுமார் ஆயிரம் கருக்கலைப்புகள் இடம்பெறுகின்றன என ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளதாக விசேட வைத்திய நிபுணர் கலாநிதி சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

அத்துடன் இனப் பெருக்க ஆரோக்கியம் மற்றும் பாலியல் கல்வி தொடர்பான தெளிவின்மையே சட்டவிரோதக் கருக்கலைப்பு அதிகரிப்புக்குக் காரணமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடளாவிய ரீதியில் இயங்கிவருகின்ற சட்டவிரோதமான கருக்கலைப்பு நிலையங்களினூடாகவும் கருவுறுதல் பற்றிய அறிவின்மை காரணமாகவும் நாளொன்றுக்கு சராசரியாக ஆயிரம் கருக்கலைப்புகள் இடம்பெறுவதான அதிர்ச்சித் தகவல் பல ஆண்டுகளுக்கு முன்னரே வெளியாகியிருந்தது.

அதனை இப்போது ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வு உறுதிப்படுத்தியிருக்கின்றது. அவ்வளவுதான்.

நாடளாவிய ரீதியில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட சட்டவிரோத கருக்கலைப்பு நிலையங்கள் இயங்கிவருகின்றன என சுகாதார கல்விச் சபையின் ஊடகத்துறை தலைவர் முன்னர் தெரிவித்திருந்தார். மிகவும் இரகசியமான முறையில் இந்தக் கிளினிக்குகள் இயங்கிவருகின்றமையால் சரியான எண்ணிக்கை இதைவிட அதிகமாகக் கூட இருக்கலாம் எனவும் கருதப்படுகின்றது.

இலங்கையில் நாளொன்றுக்கு சுமார் ஆயிரம் கருக்கலைப்புகள் இடம்பெறுகின்றன என்ற விடயத்தை பிரித்தானியாவின் லேண்ட்செட் மருத்துவ சஞ்சிகையும் சில மாதங்களுக்கு முன்னர் தகவல் வெளியிட்டு அம்பலப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது

நாட்டில் சமூக பாதுகாப்பு நிலைமை வீழ்ச்சியடைந்த காரணத்தினால் இவ்வாறு அதிகளவு கருக்கலைப்புகள் பதிவாகின்றன என அந்த நிறுவனத்தினால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பாடசாலை பிள்ளைகள், பல்கலைக்கழக மாணவியர், திருமணமாகாத பெண்கள் மற்றும் திருமணமான பெண்கள் உள்ளிட்டவர்கள் இவ்வாறு கருக்கலைப்பு செய்து கொள்கின்றனர் என ஆய்வு மூலம் தெரியவந்துள்ளது என நிபுணத்துவ மருத்துவர் ஜீ.ஜீ சமால் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

நாட்டில் சமூகப் பாதுகாப்பு நிலைமைகளில் காணப்படும் குறைபாடு காரணமாக தகாத முறைக்குட்படுத்தப்படும் சிறுமியரின் எண்ணிக்கை அதிகமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் கருக்கலைப்பு சட்ட ரீதியாகத் தடைசெய்யப்பட்டிருக்கின்றது. இது தொடர்பான சட்ட ஏற்பாடு 1883 ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் இருந்தாலும் கருக்கலைப்பு தங்கு தடையின்றி தொடர்ந்து இடம்பெறவே செய்கின்றது.

இப்போதைய மதிப்பீடுகளின் படி தினமும் ஆயிரம் சட்டவிரோதக் கருக்கலைப்புகள் என்றால் வருடத்திற்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் முதல் இரண்டு இலட்சம் வரை இவ்வகைக் கருக்கலைப்புகள் இடம்பெறுகின்றன.

இக்கருக்கலைப்பில் 90 வீதம் திருமணமான பெண்களே ஈடுபடுகின்றனர். இதற்கு வறுமை, இரண்டு பிள்ளைகளுக்கு மேல் பிள்ளைகள் பராமரிப்பது கஷ்டம் என்பவற்றை அவர்கள் முக்கிய காரணங்களாகக் கூறுகின்றனர்.

ஆனால் சட்டவிரோத கருக்கலைப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பவர்களில் 50 சதவீதத்திற்கும் மேற்பட்டவர்கள் உரிய மருத்துவப் பயிற்சியோ, அறிவோ, அனுபவமோ அற்றவர்களாவர். இதன் விளைவாக பலவிதமான பக்க விளைவுகளுக்கு கருக்கலைப்பு செய்யும் பெண்கள் உள்ளாகின்றனர் என்பது அடுத்த பிரச்சினையாகும்.


திருமணமாகிய, திருமணமாகாத பெண்களின் கருக்கலைப்பு தொடர்பான போதிய அறிவின்மை காரணமாகவும் பொருளாதார வசதியின்மையினாலேயுமே இப்படியான கருச்சிதைவுகள் இடம்பெறுகின்றன.

அதுமட்டுமல்லாமல் இளம்பெண்கள் தவறான முறையில் கருவுறுகிறார்கள். இவர்கள் முறையான பாலியல் கல்வி அறிவின்மையால் முறையற்ற கருச்சிதைவுக்கு ஆளாகின்றனர். அதேபோல் திருமணமான பெண்கள் பொருளாதாரப் பிரச்சினை காரணமாககவும் சீரான குடும்பக்கட்டுப்பாடு முறைமை தெரியாமையினாலேயுமே இப்படியான கருச்சிதைவுகளை நாடாவேண்டியவர்களாகின்றனர் எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

கருக்கலைப்புக்கு எதிரானவர்கள் கருவோ, முளையமோ, முதிர்கருவோ மனித உயிருக்குச் சமமானது என்றும், அதனை அழிப்பது கொலைக்குச் சமமானது என்றும் வாதிடுகின்ற அதே வேளை கருவை வளரவிடுவதும், அழிப்பதும் அதனைச் சுமக்கும் பெண்ணின் உரிமை என்று கருக்கலைப்பிற்கு ஆதரவாளர்கள் வாதிடுகின்றனர்.

எது,எப்படியாயினும் இத்தகைய எண்ணிக்கையில் கருக்கலைப்பு நடைபெறுவது என்பது குறைபாடு மிகுந்த சமூகக் கட்டமைப்பையே நமது நாடு கொண்டிருக்கின்றது என்பதற்கான ஒரு கண்ணாடி தான்...!





# வலிகாமம் வலய 9 பாடசாலைகளுக்கு திறன் பலகைத் தொகுதிகள் கையளிப்பு

ஜூலை மாதத்தில் வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள 9 பாடசாலைகளின் திறன்பலகை தொகுதிகளும் உத்தியோக பூர்வமாக கற்றல் நடவடிக்கைக்காக கையளிக்கப்பட்டு திறன் வகுப்பறைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இத்திறன் பலகைத் தொகுதிகள் அமெரிக்க ஐ.எம்.எச்.ஓ. மற்றும் லண்டன் ரட்ணம் நிதியம் ஆகியவற்றின் ஆதரவுடன் வழங்கப்பட்டு ஆசிரியர்களுக்கு பயிற்சியும் வழங்கப்பட்டது.

இவ்வாசிரியர்கள் தமது மாணவர்களுடன் இத்திறன் பலகைத் தொகுதியூடாக மேற்கொண்ட கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை ஆரம்ப வைபவ நாளில் அவதானிக்க சந்தர்பம் கிடைத்தது.

தொல்புரம் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை மற்றும் திருவடி நிலை கல்வயல் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை ஆடியவற்றின் செயற்பாடுகளை பார்த்தபோது மகிழ்சியேற்பட்டது.

சிறார்கள் மிக இலகுவாகவும் திறமையாகவும் திறன் பலகையை கையாளும் திறனை பெற்றிருந்தமை சிறப்பானது.

இந்தப் பாடசாலைகள் குறைந்த எண்ணிக்கையான மாணவர்களைக் கொண்டிருந்தமையால் எல்லாமாணவரும் இலகுவாகத் திறன்பலகையூடாக கற்கும் கையாளும் சந்தர்பத்தை பெற்றிருந்தமை அவர்களது செயற்பாட்டில் புலப்பட்டது. இது அவர்களுடைய கற்றல் பெறுபேறுகளில் நிச்சயமாக நல் மாற்றத்தை தரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





# லண்டனில் இருந்து தமிழ் முழங்கிய விமல் சொக்கநாதன்!



லண்டனில் இருந்து தமிழ் முழங்கிய விமல் சொக்கநாதனின் முதலாவது ஆண்டு நினைவு நாள் இன்றாகும்.

-ஐங்கரன் விக்கினேஸ்வரா-

லண்டன் பி.பி.சியின் தமிழோசையில் இருந்து விமல் சொக்கநாதன். குப்பி விளக்கிலும், சைக்கிள் உருட்டி டைனமோவில் வானொலி கேட்ட யுத்த காலப் பகுதியில் மிகப் பிரபலமான, அனைவரது மனதையும் ஈர்த்த புகழ்பெற்ற பிபிசி லண்டன் வானொலியில் இருந்து ஒலிக்கும் காந்தக்குரல். இனி, இந்த கம்பீரக் குரலை கேட்க முடியாது என்றபோது நம்ப முடியவில்லை. இந்தத் தகவல் உண்மையாக இருக்கக் கூடாது என்று மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்க, தகவல் மேல் தகவலாக லண்டனில் இருந்து தமிழ் முழங்கிய விமல் சொக்கநாதன் விண்ணேவிய செய்தி மனதை நெருடியது.

**பிபிசி தமிழோசையில் விமல்**

உலகப் புகழ்பெற்ற லண்டன் பிபிசி வானொலியின் ஒலிபரப்பாளரும், தமிழ்ப் பத்திரிகைகளில் தொடர்ச்சியாக கட்டுரைகளை எழுதிவந்தவரும் தொழில் ரீதியாக சட்டத்தரணியுமாகிய விமல் சொக்கநாதன் லண்டன் மாநகரில் அகால மரணத்தைத் தழுவினார் என்ற செய்தி காற்றலைகளில் சோகமாக வந்தது.

எண்பதுகளில் ஈழப் போர் உக்கிரமடைந்த காலத்தில் பிபிசி தமிழோசையே ஒரே ஒரு நம்பகத்தன்மை கொண்ட வானொலியாக இருந்து வந்தது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவை 'ஹலங்கா புவத்' என்ற அரச செய்திச் சேவையின் பொய்ச் செய்திகளை ஒலிபரப்பியதும் இதற்கு ஒரு காரணம். போரின் நெருக்கடிகளிலும், மின்சாரமின்மை, மின்கலங்களுக்கு (பற்றறி) தடை என்பனவற்றுக்கு மத்தியிலும் சைக்கிள் டைனமோக்கள் மூலம் வானொலியை இயக்கி பிபிசி வானொலியை ஈழத் தமிழ் மக்கள் கேட்டுவந்தனர்.

தமிழோசையின் அப்போதைய பொறுப்பாளர் சங்கர் அண்ணா என்று அன்பாக அழைக்கப்படும் சங்கரமூர்த்தி, ஆனந்தி அக்கா என்று அன்பாக அழைக்கப்படும் மூத்த ஒலிபரப்பாளர் ஆனந்தி சூரியப்பிரகாசம், விமல் சொக்கநாதன் ஆகியோர் அக்காலத்தில் மக்களின் பேரபிமானம் பெற்ற ஒலிபரப்பாளர்களாக இருந்தார்கள். இவர்களது குரலைக் கேட்க இரவு 9 மணிக்கு வானொலியைச்சிற்றலை வரிசைக்கு திருப்புவது ஈழத் தமிழர்களது வழக்கமாக இருந்தது.

1941 ஆம் ஆண்டு மே 3 ஆம் திகதி பிபிசி தமிழோசை ஆரம்பிக்கப்பட்டது. தொடக்கத்தில் வாரத்தில் இரண்டு நாள்கள் பதினைந்து நிமிட ஒலிபரப்பாகிவந்த தமிழோசை பின்னர் வாரத்தில் ஐந்து நாள்கள் நாளொன்றுக்கு அரை மணி நேரம் ஒலிபரப்பானது. இந்தியா, இலங்கை, மற்றும் கனடா போன்ற புலம்பெயர்நாடுகளில் தமிழ் மக்கள் மத்தியில் இவ்வானொலி பிரபலமாக இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

**இலங்கை வானொலி அறிவிப்பாளர்**

ஒரு கலைக் குடும்பத்தின் ஊடாக இளம் வயதிலேயே கலைத்துறைக்கு வந்தவர். சிறுவர் மலர் நாடகங்களில் ஆரம்பித்து, மேடை நாடகங்களில் நிறைய நடித்தவர். விமல் சொக்கநாதன் சிறந்த வானொலிக் கலைஞர். இலங்கை வானொலியில் நீண்ட காலம் அறிவிப்பாளராக பணியாற்றியவர்.

இங்கிலாந்துக்கு குடிபெயர்ந்த பின்னர் பிபிசி தமிழோசையில் அறிவிப்பாளராக இருக்கும் இவரது குரல் பன்னாட்டு வானொலிகளிலும் ஒலித்தது.

அறிவிப்பாளரும், லண்டனில் "இசைக்குயில்" போட்டி நிகழ்ச்சி அமைப்பாளருமான யோகா தில்லைநாதன் இவரது உடன்பிறந்த சகோதரி ஆவார்.

இலங்கை வானொலியில் இவர் படைத்த இசையும் கதையும், வாலிப வட்டம் போன்ற நிகழ்ச்சிகள் புகழ் பெற்றவை. நகைச்சுவை கலந்து இவர் வழங்கிய களம் பல காண்போம் என்ற உலக அரசியல் ஆய்வு நிகழ்ச்சி பல அரசியல் தலைவர்களையே கவர்ந்தது. வானொலி ஒலிபரப்புக் கலை பற்றி "வானொலிக் கலை" என்ற நூலையும் எழுதியுள்ளார்.

**ஈழ திரைப்படத்தில் விமல் நடிப்பு**

அத்துடன் விமல் சொக்கநாதன் வரணியூரானின் இயக்கிய பாசச் சுமை எனும் மேடை நாடகத்திலும் நடித்துள்ளார். அத்துடன் "நான் உங்கள் தோழன்" 1978 ஆம் ஆண்டு வெளிவந்த ஈழத்து தமிழ்த் திரைப்படத்திலும் விமல் சொக்கநாதன் நடித்துள்ளார்.

1978 ஆம் ஆண்டில் இலங்கை தமிழ் திரைப்பட வரலாற்றில் ஒரு சாதனை ஆகும். நான் உங்கள் தோழன். தொழிற்சங்கத் தலைவர்களில் ஒருவரான வி. பி. கணேசன் தனது முதலாவது படமான புதிய காற்றுக்கு கிடைத்த வரவேற்பைத் தொடர்ந்து எடுத்த திரைப்படம் ஆகும்.

இதுவரையில் விமல் சொக்கநாதன் மூன்று நூல்களை எழுதியுள்ளார். வானொலி ஒலிபரப்புக் கலை பற்றி "வானொலிக் கலை" என்ற நூலைச் சென்னையில் காந்தளகம் பதிப்பகம், மே 2007இல் வெளியிட்டது.

இதன் பின் மிக அண்மைக் காலத்தில் "லண்டனில் இருந்து விமல்" -வீரகேசரியில் வெளியான தொடர் கட்டுரைகளின் தொகுப்பு நூலும், "விமலின் பக்கங்கள்" – லண்டன் புதினம் வார இதழில் வெளியான கட்டுரைகளின் தொகுப்பு நூலையும் விமல் படைத்துள்ளார்.

இவ்விரு நூல்களும் லண்டன், பாரிஸ், சென்னை, யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களில் வெளியிடப்பட்டு, நண்பர்களாலும் வாசகர்களாலும் பெரிதும் பாராட்டப்பட்டவர் விமல் சொக்கநாதன்.

அறிவிப்பின் சிகரமாக, லண்டனில் இருந்து தமிழ் முழங்கிய மூத்த ஒலிபரப்பாளர் விமல் சொக்கநாதன் 75 வயதில் லண்டனில் விபத்தொன்றில் அகால மரணமானார். தமிழ் வானத்தின் ஒலி அலை ஓய்ந்து, வண்ணக் குரல் இனி முழங்காதோ என மனம் ஏங்குகிறது.

# சமூக விஞ்ஞானப் போட்டியில் தோப்பூர் பாத்திமா மாணவி சாதனை



**(எம்.எம்.நௌபீக்)**

2024 சமூக விஞ்ஞானப் போட்டியில் தோப்பூர் பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் தரம் 11 இல் கல்வி கற்கும் மாணவி பைசர் பாத்திமா ஷீபா மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார் என்று அதிபர் ஏ.பி.அப்துல் ஜப்பார் தெரிவித்தார்.

வெற்றிபெற்ற மாணவிக்கும் இந்த மாணவியின் வெற்றிக்காக உழைத்த பாடசாலையின் சமூக விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கும் இதற்கு துணை நின்ற ஏனைய ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் தோப்பூர் சமூகம் பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துள்ளது.





# ஹமாஸ் இஸ்மாயில் ஹனியே படுகொலை:
# மொசாட்டின் பழிக்குப் பழி!
# ஈரானில் வைக்கப்பட்ட இலக்கு!!

- ஐங்கரன் விக்கினேஸ்வரா -

ஈரான் புதிய ஜனாதிபதி பதவியேற்பு விழாவில் பங்கேற்பதற்காக சென்றிருந்த இஸ்மாயில் ஹனியே கொல்லப்பட்டதாக ஹமாஸ் அமைப்பு அறிவித்துள்ளது.

ஈரானில் மெய்ப் பாதுகாவலருடன் அவர் தனது இல்லத்தில் குறிவைக்கப்பட்டார் என்று ஈரானின் புரட்சிகர காவலர் படை தெரிவித்துள்ளது. ஈரானில் ஜனாதிபதி மசூத் பெசெஷ்கியானின் பதவியேற்பு விழாவில் கலந்து கொள்வதற்காக சென்றிருந்தார். தற்போது இந்தச் சம்பவத்தின் சூழ்நிலைகளை ஆராய்ந்து வருவதாக ஈரானிய அரசு கூறியுள்ளது.

### ஈரானில் படுகொலையான ஹமாஸ் தலைவர்!

இஸ்ரேல் – ஹமாஸ் படைகளுக்கு இடையே பல மாதங்களாக போர் நீடித்து வருகிறது. இந்த போரில் உயிரிழந்த பாலஸ்தீனர்களின் எண்ணிக்கை நாற்பது ஆயிரமாக உயர்ந்துள்ளது.

இதுவரை 90 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ள நிலையில், தொடர்ந்து ஹமாஸ் அமைப்பினர் மீதான தாக்குதலை இஸ்ரேல் படைகள் தீவிரப்படுத்தி வருகின்றன.

குறிப்பாக பாலஸ்தீன போராளிகளைக் குறிவைத்து இஸ்ரேல் படைகள் தாக்குதல் நடத்தி வருகிறது. ஈரான் தலைநகர் டெஹ்ரானில் ஹமாஸ் இயக்கத் தலைவர் இஸ்மாயில் ஹனியே கொல்லப்பட்டார்.

ஈரானின் புதிய அதிபராக தேர்வான மசூத் பெசெஷ்கியன் பதவியேற்பு விழாவில் பங்கேற்க சென்றிருந்தார் இஸ்மாயில் ஹனியே. தெஹ்ரானில் அவர் தங்கியிருந்த வீட்டை குறிவைத்து இஸ்ரேலிய படைகள் தாக்குதல் நடத்தியது. இதில் ஹனியே மற்றும் அவரது பாதுகாவலர் என 2 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல் படை இந்த தகவலை உறுதிப்படுத்தி உள்ளது என்று ஈரான் நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளது.

ஹனியே படுகொலைக்கு இதுவரை யாரும் பொறுப்பேற்கவில்லை.

ஆயினும் பாலஸ்தீன போராளிகளைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தும் இஸ்ரேல் படைகளும், உளவு அமைப்பு மொசாட்டும் மிகத் தீவிரமாக வேட்டையாடத் தொடங்கி உள்ளன.

### இஸ்மாயில் ஹனியே?

இஸ்மாயில் ஹனியே கடந்த 2017 முதல் ஹமாஸின் தலைவராக இருந்து வருகிறார். தற்போது ஹமாஸின் அரசியல் பணியகத்தின் தலைவராக பணியாற்றி வந்துள்ளார்.

அத்துடன் இஸ்மாயில் ஹனியே ஹமாஸ்



போராளிக் குழுவின் நாடு கடத்தப்பட்ட அரசியல் தலைவராக இருந்து வந்தார். சமீபத்திய ஆண்டுகளில் கத்தாரில் தனது பெரும்பாலான நேரத்தை செலவிட்டார்.

தொடர்ச்சி▼



# ஹமாஸ் இஸ்மாயில் ஹனியே படுகொலை: மொசாட்டின் பழிக்குப் பழி! ஈரானில் வைக்கப்பட்ட இலக்கு!!

**தொடர்ச்சி▲**

தற்போதய போது இஸ்ரேல்–காசா போரில், அவர் போர் நிறுத்தப் பேச்சில் ஒரு பேச்சாளராகச் செயல்பட்டார். அத்துடன் ஹமாஸின் முக்கிய நட்பு நாடான ஈரானுடன் தொடர்பு கொண்டிருந்தார்.

இந்த நிலையில், ஹமாஸ் அமைப்பின் முக்கிய தலைவரான இஸ்மாயில் ஹனியே ஈரானில் கொல்லப்பட்டமை அரபுலகில் பாரிய அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

### மொசாட்டின் பழிதீர்க்கும் படலம்

இந்தப் படுகொலைக்கு உடனடியாக யாரும் பொறுப்பேற்கவில்லை. ஆனால் சந்தேகம் உடனடியாக இஸ்ரேல் மீது விழுந்ததுள்ளது. ஹனியே மற்றும் ஹமாஸின் பிற தலைவர்களை ஒக்டோபர் 7 இஸ்ரேல் மீதான தாக்குதலுக்கு பழி தீர்க்கும்




வண்ணம் கொல்ல இஸ்ரேல் உறுதியளித்தது.

ஆயினும் இக்கொலை எப்படி நடந்தது என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. மேலும் இஸ்ரேல் உடனடியாக கருத்துத் தெரிவிக்கவில்லை.

ஆனால் அவர்களின் மொசாட் உளவுத்துறை நிறுவனத்தால் நடத்தப்பட்ட படுகொலைகளுக்கு அது பெரும்பாலும் உரிமை கோருவதில்லை.

இவ்வருட ஏப்ரலில் ஹனியே கத்தாரில் இருந்த போது காசா பகுதியில் வான்வழித் தாக்குதலில் ஹனியேவின் மூன்று மகன்களையும் அவரது பேரக்குழந்தைகள் பலரையும் இஸ்ரேல் கொன்றது.

தற்போது லெபனானின் தலைநகரான பெய்ரூட்டில் இஸ்ரேல் தாக்குதல் நடத்திய சில மணிநேரங்களுக்குப் பிறகு ஒரு உயர்மட்ட ஹிஸ்புல்லா தளபதி கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### மொசாட்டின் தப்பாத குறி

சமீபத்திய ஆண்டுகளில் ஈரானிலும் பிற இடங்களிலும் பல ஹமாஸ் உயர்மட்ட படுகொலைகளை நடத்திய இஸ்ரேல், இதுவரையில் ஹனியேவின் கொலை குறித்துக் கருத்துத் தெரிவிக்கவில்லை.

2004 இல், இஸ்ரேல் காஸாவில் வான்வழித் தாக்குதலை நடத்தி, அப்போது ஹமாஸின் தலைவர் அப்தெல் அஜிஸ் ரந்திசி கொன்றது. அதே ஆண்டு, காசா நகரில் ஹமாஸ் போராளிக் குழுவின் நிறுவனர்களில் ஒருவரான அகமது யாசினையும் படுகொலை செய்தது.

தற்போது ஹனியே படுகொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் சில மணிநேரங்களுக்கு முன்னர், இஸ்ரேலிய படைகள் லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் வான்வழித் தாக்குதலில் மூத்த ஹெஸ்புல்லா தளபதி ஃபுவாட் ஷுரைக் கொன்றனர் என்று ‘ஐடிஎஃப்’ தெரிவித்துள்ளது.

பழிக்குப் பழியாகக் கடந்த சனிக்கிழமையன்று இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு கோலன் ஹைட்ஸ் பகுதியில் ஒரு கால்பந்து மைதானத்தைத் தாக்கிய ராக்கெட் தாக்குதலுக்குப் பொறுப்பான தளபதியைக் குறிவைத்து கொன்றுள்ளது.

மத்திய கிழக்கில் போர்ப் பதற்றங்கள் அதிகரித்துள்ள வேளையில், விரைவில் பிராந்திய மோதலாக ஏற்படுமா என்று பல மேற்குலக நாடுகள் அஞ்சுகின்றன. குறிப்பாக பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளில் உள்ள தலைவர்களும் அதிகாரிகளும் லெபனான், இஸ்ரேல் மற்றும் ஈரானில் உள்ள பிரதிநிதிகளை அணுகி பரந்த பிராந்தியப் போரைத் தடுக்க முயன்று வருகின்றனர்.



# கல்முனை பற்றிமா மாணவர்களுக்கு நுகர்வோர் அதிகார சபை விழிப்புணர்வு!



(எம்.என்.எம்.அப்ராஸ்)

அம்பாறை மாவட்ட செயலகத்தின் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையால் பாடசாலை மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி தேசிய பாடசாலை உயர்தர பிரிவு மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி பாடசாலையின் அதிபர் எஸ்.இ.றெஜினோல்ட் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது பாவனையாளர், உரிமைகள், பொறுப்புகள், சட்டங்கள், பாதுகாப்பு மற்றும் பொருள்கள், சேவைகளின் போது கவனிக்க வேண்டிய முக்கியமான விடயங்கள் மற்றும் தற்போதைய சந்தையில் பொருள்களின் அரச கட்டுப்பாட்டு விலை மற்றும் அதிகார சபையின் சட்ட திட்டங்கள் சம்மந்தமாக மாணவர்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிக்குப் பிரதானவளவாளராகஅம்பாறைமாவட்ட நூகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் புலன் விசாரணை அதிகாரி இஷ்ட்.எம்.ஸாஜீத் மற்றும் புலன் விசாரணை அதிகாரி ஐ.எல்.மர்ஜுன், எம்.எச்.எம்.றிபாஜ் ஆகியோருடன் பாடசாலையின் உயர்தர பிரிவு பகுதித் தலைவர்கள், ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

# மருதமுனை மாணவன் தேசிய மட்டத்துக்குத் தெரிவு

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

அம்பாறை மாவட்டம் மருதமுனையை சேர்ந்த எம்.என்.எம்.அபியத் என்ற மாணவன் மாகாண மட்ட விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் முதலிடம் பெற்றுத் தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் தரம் 8 – 9 போட்டி பிரிவில் பங்கு பற்றி இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளார். மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி மாணவரான இவர் பல் வைத்திய நிபுணர் எம்.ஐ. எம்.நௌஷாத் மற்றும் ஆசிரியை ஏ.சி.ஷபானா ஆகியோரின் புதல்வராவார்.

மாணவனின் இந்த வெற்றிக்கு வழிகாட்டிய பொறுப்பு ஆசிரியர், பாடசாலையின் அதிபர், முன்னாள் அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள் உள்ளிட்ட நிர்வாகத்தினருக்கும் ஊக்குவித்த மாணவனின் பெற்றோருக்கும் கல்வி சமூகம் தமது பாராட்டுக்களை தெரிவித்துள்ளது.





# இலங்கை ஊடகவியலாளர் மன்ற ஊடக திட்டக் கலந்துரையாடல்

(ஹஸ்பர்)

இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றம் ஏற்பாடு செய்த ஊடக திட்டம் தொடர்பான நிகழ்வு வெள்ளவத்தையில் உள்ள தனியார் விடுதியில் இரு நாள்கள் இடம் பெற்றது.

இதில் பிரதேச ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் பங்கேற்றனர். இதன் போது தொடர்ந்தும் இந்தக் குழு வலையமைப்பு ஊடாக எதிர் காலத்தில் செயற்படுவது பற்றியும் கலந்துரையாடப்பட்டன.

கடந்த காலங்களில் கருத்து சுதந்திரம், தகவல் அறியும் உரிமை சட்டம் தொடர்பில் ஊடக தயாரிப்புக்களை மேற்கொண்டவர்கள் இதன் போது



சான்றிதழ் மற்றும் நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் செயற்கை நுண்ணறிவு தொடர்பிலான பயிற்சியை இலங்கை ஒளிபரப்பு கூட்டுத்தாபன நிகழ்ச்சித் தயாரிப்பாளர் இஸ்பஹான் சரீப்தீன் வழங்கினார்.

நிகழ்நிலைக் காப்புச் சட்டம், கருத்து சுதந்திரம் தொடர்பிலான தெளிவுபடுத்தல்களைச் சட்டத்தரணி சந்தீப கமதிகே வழங்கினார்.

நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக அததெரன கே. சி. சாரன்க மற்றும் இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றத்தின் பணிப்பாளர் சட்டத்தரணி அஸாட் முஸ்தபா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தோட்டத் தொழிலாளி மீது தாக்குதல் கண்டித்துப் பணிப் புறக்கணிப்பு!





(தலவாக்கலை பி.கேதீஸ்)

தோட்ட அதிகாரி ஒருவர் தோட்டத் தொழிலாளி ஒருவரைத் தாக்கினார் எனக் கூறி தோட்ட அதிகாரியின் அடாவடித் தனத்தை கண்டித்துத் தலவாக்கலை ட்றூப் தோட்ட தொழிலாளர்கள் நேற்றும் (31) இன்றும் (01) பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

மஸ்கெலியா பெருந்தோட்ட கம்பனியின் கீழ் இயங்கும் தலவாக்கலை ட்றூப் தோட்ட பிரிவுகளான ட்றூப், கொரின், கிளனமோரா ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த 400 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தோட்ட அதிகாரியின் அடாவடித்தனத்தை கண்டித்து வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

ட்றூப் தோட்டத்தில் அறுவடை செய்யப்படும் தேயிலை கொழுந்துகளை தலவாக்கலை தேயிலை தொழிற்சாலைக்கு அரைப்பதற்காக கொண்டு வருவதாகவும், தேயிலை கொழுந்துகளை கொண்டு வரும்போது தேயிலை கொழுந்துகள் திருடப்பட்டுள்ளன எனக் கூறி தலவாக்கலைதோட்டஅதிகாரிதோட்டதொழிலாளி ஒருவரை கடந்த (30) திகதி மாலை தாக்கியுள்ளார் என்றும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தோட்ட தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தத் தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்துத் தோட்டத் தொழிலாளர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

தலவாக்கலை தோட்ட அதிகாரி அத் தோட்டத்திலிருந்து இடமாற்றம் செய்யப்படும்வரை பணிப்புறக்கணிப்பு தொடரும் எனவும் தோட்டத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தாக்குதலுக்குள்ளானதாக கூறப்படும் தோட்டத் தொழிலாளி தலவாக்கலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். பின்னர் லிந்துலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் நுவரெலியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தோட்ட தொழிலாளி மீதான தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தலவாக்கலை தேயிலை தொழிற்சாலைக்கு முன்பாக தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய தோட்ட அதிகாரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நுவரெலியா நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்று தலவாக்கலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் சமந்த பெரேரா தெரிவித்தார்.



# கோணேஸ்வர வரலாற்றுப் படிப்பினை சம்பந்தமான போட்டியும் பரிசளிப்பும்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

திருகோணமலை பரடைஸ் பாலர் பாடசாலையின் 9 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு திருக்கோணேஸ்வர ஆலய வரலாற்றுப் படிப்பினைகளை இளைய தலைமுறைக்கு ஊடு கடத்தும் நோக்கில் வினா விடைப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் அண்மையில் திருகோணமலை ஆர்.கே.எம். ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது.



நிகழ்வில் ஆன்மீக அதிதியாக குருமகா சந்நிதான தென்கயிலை ஆதின குரு முதல்வரான தவத்திரு அகத்தியர் அடிகளாரும், பிரதம விருந்தினராக, யாழ்ப்பாணம் சிவபூமி அறக்கட்டளை தலைவரான செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகனும் சிறப்பு விருந்தினர்களாக வரலாற்று ஆய்வாளரான என்.கே.எஸ்.திருச்செல்வம், சட்டத்தரணி உமாகரன் இராசையா, மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் திருமதி லக்ஷ்மிதேவி சிறிதரன் ஆகியோரும் மற்றும் மாணவர்கள், பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.



# கலாபூஷண விருதுக்கு விண்ணப்பம் கோரல்

(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் வருடாந்தம் வழங்கப்படும் கலாபூஷண விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 10 ஆம் திகதி ஆகும்.

விண்ணப்பிக்க விரும்பும் தகுதியான கலைஞர்கள் முடிவுத் திகதிக்கு முன்னர் பூரணபடுத்தப்பட்ட விண்ணப் பப்படிவத்தையும், துறை சார்ந்த இதர ஆவணங்களையும் தங்கள் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்



## ஜார்க்கண்ட் சட்ட சபையில் அமளி; 18 பா.ஜ.கவினர்

# இடைநிறுத்தம்!

ஜார்க்கண்ட் சட்டசபையில் அமளியில் ஈடுபட்ட 18 பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

ஜார்க்கண்ட்சட்டசபைகூட்டத்தொடர் இன்று காலை கூடியது. இந்தக் கூட்டத் தொடர் தொடங்கும் முன்னர் ஆளும் கட்சியான ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா உறுப்பினர்களும், எதிர்க் கட்சியான பா.ஜ.க. உறுப்பினர்களும் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

அதன்பின், வேலைவாய்ப்பு உள்ளிட்ட சில முக்கிய பிரச்சனைகள் தொடர்பான கேள்விகளுக்கு முதலமைச்சர் ஹேமந்த் சோரன் பதிலளிக்க வேண்டும் எனக் கோஷங்கள் எழுப்பினர். இதனால் சட்டசபையில் பரபரப்பு நிலவியது.

எதிர்க்கட்சிகளின் கேள்விகளுக்கு சோரன் பதிலளிக்க மறுத்ததையடுத்து, அதைக் கண்டித்து எதிர்க் கட்சியினர் முழக்கங்களை எழுப்பினர்.

இந்நிலையில், பா.ஜ.க. எம்.எல். ஏ.க்கள் 18 பேரை சபாநாயகர் நாளை பிற்பகல் 2 மணி வரை சட்டசபையில் இருந்து 'சஸ்பெண்ட்' செய்து அறிவித்தார்.

ஆனால், 'சஸ்பெண்ட்' செய்யப்பட்ட எம்.எல்.ஏ.க்கள் சபையை விட்டு வெளியேற மறுத்தனர். இதனால் அவர்களை சபைக் காவலர்கள் குண்டுக்கட்டாக வெளியேற்றினர்.

நேற்று இரவு பா.ஜ.க. எம்.எல். ஏ.க்கள் சிலர் சட்டசபையின் லாபியில் தங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாய்ந்தோடும் வெள்ளத்துள் வைத்து பெண் மீது துன்புறுத்தல்!

உத்தரபிரதேசம் – லக்னோவில் வெள்ளம் சூழ்ந்த விதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற பெண்ணை கும்பல் ஒன்று துன்புறுத்தும் வீடியோ ஒன்று சமூக வலைதளங்களில் வைரலாகியுள்ளது.

தாஜ் ஹோட்டல் பாலத்தின் கீழ் வெள்ளம் தேங்கியிருந்த வீதியில் மோட்டார் சைக்கிளில் ஓர் ஆணும் பெண்ணும் வந்துள்ளனர்.

அப்போது அவ்வழியில் நின்ற கும்பல் ஒன்று அவர்கள் மீது தேங்கியிருந்த தண்ணீரை தெளிக்கத் தொடங்கியது. பின்னர் மோட்டார் சைக்கிளை பின்னால் பிடித்து இழுத்து நிறுத்தினர். இதனால் நிலை தடுமாறிய இருவரும் வீதியில் தேங்கியிருந்த வெள்ளத்தில் விழுந்தனர்.

அதன் பின்னர் பாலத்தின் அடியில் நின்ற அந்தக் கும்பலை அங்கிருந்து பொலிஸார் விரட்டி அடித்தனர்.

இந்த வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலானதையடுத்து, லக்னோவின் உதவிக் காவல் ஆணையர், கூடுதல் காவல் ஆணையர், காவல் துணை ஆணையர் ஆகியோர் உடனடியாக சஸ்பெண்ட் செய்யப்பட்டனர்.



இந்த விவகாரம் தொடர்பாக வழக்குப் பதிவு செய்துள்ள பொலிஸார் 4 பேரை கைது விசாரித்து வருகின்றனர்.





### இலங்கைக் கடற்படையினரின் ரோந்துப்படகு மோதியதில் உயிரிழந்த

# மீனவரின் குடும்பத்தினருக்கு 10 இலட்சம் ரூபா நிவாரணம்

"இலங்கைக்கடற்படையினரின்ரோந் துப்படகு மோதியதில் உயிரிழந்த மீன வரின் குடும்பத்தினருக்கு 10 இலட்சம் ரூபா வழங்கப்படும்" என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரி வித்துள்ளார்.

"இலங்கைக் கடற்படையினரின் ரோந்துப்படகு மோதியதில் உயிரிழந்த இராமநாதபுரம் மீனவரின் குடும்பத் தினருக்கு 10 இலட்சம் ரூபா நிவாரணம் வழங்கப்படும்" என்று தமிழக முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித் துள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கை யில்,

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ் வரத்தைச் சேர்ந்த மூக்கையா (வயது -54), முத்துமுனியாண்டி (வயது -57), மலைச்சாமி (வயது-59) மற்றும் இரா மச்சந்திரன் (வயது-64) நால்வரும் இன்று அதிகாலை இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து விசைப் படகில் சென்று நெடுந்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அங்கு வந்த இலங்கைக் கடற்படை யினரின் ரோந்துப்படகு மோதியதில், மீன்பிடி விசைப்படகு சேதமடைந்து நீரில் மூழ்கியதில் மலைச்சாமி (வயது -59) என்பவர் கடலில் மூழ்கி உயிரி ழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனை யும் அடைந்தேன்.

மேலும், அந்த விசைப்படகில் சென்ற இரண்டு மீனவர்களை இலங் கைக் கடற்படையினர் அழைத்துச் சென்றுள்ளனர் எனத் தெரிய வருகின் றது. நீரில் மூழ்கிய மற்றொரு மீனவர் தேடப்பட்டு வருகின்றார்.

தமிழ்நாடு அரசு தொடர்ந்து பல முறை கடிதம் மூலமாகவும், நேரிலும் ஒன்றிய அரசை வலியுறுத்தியும் உரிய தூதரக நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படாமையால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதும் இதுபோன்ற விலைமதிப்பில்லா உயிரிழப்புகளும் நேர்கின்றன.

இச்சம்பவத்தை மத்திய அரசிடம் தமிழ்நாடு அரசு தக்க முறையில் எடுத் துச் செல்லும்.

இச்சம்பவத்தில் உயிரிழந்த மலைச் சாமியின் குடும்பத்தினருக்கும் உறவி னர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை யும் ஆறுதலைத் தெரிவித்துக் கொள்வ தோடு, அவருடைய குடும்பத்தினருக்கு பத்து இலட்சம் ரூபா முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் அறிவுத்தியுள்ளேன்.

– இவ்வாறு அதில் குறிப்பிடப் பட்டுள்ளது.



# இந்தியரா? கறுப்பரா?

## கமாலா ஹாரிஸ் மீது டொனால்ட் டிரம்ப் கக்கிய

# இனவாதம்!




அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிடும் டொனால்ட் டிரம்ப், சக போட்டியாளரான கமலா ஹாரிஸ் மீது இனவெறிக் கருத்துகளைத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் தற்போதைய துணை அதிபர் கமலா ஹாரிஸ், குடியரசுக் கட்சி சார்பில் முன்னாள் அதிபர் டிரம்ப் ஆகியோர் போட்டியிடுகின்றனர். இதனால், இருவரும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கமலா ஹாரிஸ் மீது, டிரம்ப் இனவெறிக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

சிக்காக்கோவில் நடந்த கறுப்பின பத்திரிக்கையாளர்கள் தேசிய சங்கத்தின் மாநாட்டில் டிரம்ப் பங்கேற்றார். அப்போது அவர் அளித்த பேட்டியில்,

“கமலா ஹாரிஸ் எப்போதும் இந்திய பாரம்பரியத்தை உடையவர். அவர் இந்திய பாரம்பரியத்தை மட்டுமே ஊக்குவித்து வந்தார். அவர் கறுப்பினத்தவராக மாறும் வரை அவர் கறுப்பினத்தவர் என்று எனக்குத் தெரியாது. கமலா ஹாரிஸ் தற்போது கறுப்பினத்தவராக அறியப்பட விரும்புகிறார். இதனால் அவர் இந்தியரா அல்லது கறுப்பினத்தவரா? என்பது எனக்குத் தெரியவில்லை.

நான் அனைவரையும் மதிக்கிறேன். ஆனால் அவர் வெளிப்படையாக இல்லை. ஏனென்றால் அவர் எல்லா வழிகளிலும் இந்தியராக இருந்தார். பின்னர் திடீரென்று கறுப்பினத்தவராகிவிட்டார்.

இந்த நாட்டின் கறுப்பின மக்களை நேசிக்கிறேன். கறுப்பின மக்களுக்காக நான் நன்மைகள் பல செய்துள்ளேன். ஆபிரகாம் லிங்கனுக்குப் பிறகு கறுப்பின மக்களுக்கான சிறந்த அதிபர் நான்தான்” என்றார்.

கமலா ஹாரிஸ் மீதான டிரம்பின் இந்தக் கருத்துக்கு பல்வேறு தரப்பினர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் கரீன் ஜீன் பியர் கூறும்போது,

“ஒருவரை அவர்கள் யார், அவர்கள் எப்படி அடையாளம் காட்டுகிறார்கள் என்பதைச் சொல்ல எவருக்கும் எந்த உரிமையும் இல்லை. டிரம்பின் கருத்து வெறுக்கத்தக்கது மற்றும் அவமதிப்பு ஆகும்” என்றார்.

கமலா ஹாரிசின் தாயார் இந்தியாவைச் சேர்ந்தவர். தந்தை ஜமைக்காவைச் சேர்ந்தவர். அமெரிக்க வரலாற்றில் முதல் கறுப்பின மற்றும் முதல் ஆசிய–அமெரிக்கத் துணை அதிபர் கமலா ஹாரிஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் 08

# கனடா முரசு

வியாழக்கிழமை 01/08/2024

## 10 வயதுச் சிறுவனை காணோம் எனப் புகார்

கியூபெக், ஓகஸ்ட்01

மொன்றியாலில் ஜோர்டன் பிளசிங் என்ற 10 வயதுச் சிறுவன் ஒருவனை காணவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

கறுப்பினத்தவரான

02▶



# திட்டமிடப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் டொரன்டோ பெரும்பாகத்தில் முறியடிப்பு

**ஒன்ராரியோ, ஓகஸ்ட்01**

**டொரன்டோ பெரும்பாகத்தில் திட்டமிடப்பட்ட பயங்கரவாத தாக்குதல் ஒன்று முறியடிக்கப்பட்டுள்ளது எனத் தேசிய பொலிஸ் பிரிவு தெரிவித்துள்ளது.**

**இது குறித்த விசாரணையில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

**கைதானவர்கள் 62 வயதான அஹ்மத் புவாட் மொஸ்டாபா எல்டிடி, 26 வயதான மொஸ்டாபா எல்டிடி எனவும் இவர்கள் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் எனவும் நீதிமன்ற ஆவணங்கள் உறுதிப்படுத்துகின்றன.**

ரிச்மன்ட் ஹில் நகர விடுதி ஒன்றில் கைதான இவர்கள் இருவரும் தந்தை, மகன் என பொலிஸார் அறிவித்துள்ளது.

பல பொலிஸ் சேவைகளை உள்ளடக்கிய ஒரு மாத விசாரணைக்குப் பின்னர் இவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.


பயங்கரவாத தாக்குதலை திட்டமிடும் இறுதிக் கட்டத்தில் இவர்கள் இருந்தனர் எனக் கூறப்படும் நிலையில் இவர்கள் மீது பயங்கரவாதம் தொடர்பான மொத்தம் 9 குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இவர்கள் இருவரும் ஸ்கார்பரோவில் ஒரே முகவரியில் வசிக்கின்றனர் என நீதிமன்ற ஆவணங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இவர்கள் இருவரும் கனடிய குடியுரிமை கொண்டவர்கள் என கூறிய பொலிஸார், அவர்கள் வேறு

02▶





# இளம் இந்தியத் தம்பதிகளின் எதிர்காலம் காட்டுத்தீயால் கேள்விக்குறி நிலையில்

அல்பேர்ட்டா, ஓகஸ்ட்01

கனடாவுக்கு புலம்பெயர்ந்த ஒரு இந்திய தம்பதி, சமீபத்தில் அல்பேர்ட்டாவிலுள்ள ஜெஸ்பர் நகரில் குடியேறினார்கள்.

எப்படியும் கனடாவில் குடியுரிமை பெற்றுவிடலாம் என நம்பியிருந்த அவர்களுடைய எதிர்காலம் காட்டுத்தீயால் கேள்விக்குறியாகியுள்ளது.

2023ஆம் ஆண்டு, இந்தியர்களான ரமன்தீப் சிங்கும் (28), அவரது மனைவியான சிம்ரன் சத்வாலும் (28) கனடாவின் அல்பேர்ட்டா மாகாணத்திலுள்ள ஜெஸ்பர் நகருக்கு குடிபெயர்ந்தார்கள்.

2108ஆம் ஆண்டு ஒரு மாணவராக கனடாவுக்கு வந்த ரமன்தீப், 2021ஆம் ஆண்டு படித்து முடித்து பணி உரிமம் பெற்று, சர்ரேயிலுள்ள உணவகம் ஒன்றில் பணிக்கு சேர்ந்தார்.

பின்னர், கனடாவுக்கு புதிதாக வந்தவர்கள் வாழவும், பணி செய்யவும், குடியமரவும் வகை செய்யும் அலபேர்ட்டா மாகாணத்தின் Alberta's Rural Renewal Stream program என்னும் திட்டத்தின் கீழ் ஜெஸ்பர் நகருக்குக் குடிபெயர்ந்தார்.

அப்படியே நிரந்தர குடியிருப்பு அனுமதி பெற்று, பிறகு குடியுரிமையும் பெற்றுவிடலாம் என்ற நம்பிக்கையில் இருக்கும்போதுதான் இயற்கை சதி செய்தது.

ஜெஸ்பர் நகரில் ஏற்பட்ட காட்டுத்தீயால், அங்கு வாழ்ந்த சுமார் 25,000 பேர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்கள். ரமன்தீப்பின் பணி உரிமம் செப்டம்பர் மாதம் 9ஆம் திகதியுடன் காலாவதியாகிறது. அதை நீட்டிக்க அவர் விண்ணப்பித்துள்ளார்.



## 10 வயதுச்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த சிறுவனின் உயரம் 140 சென்டிமீட்டர் எனவும், 32 கிலோ கிராம் எடையுடையவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கருத்த நிற முடியும், பிறவுண் நிற கண்களையும் கொண்டவர் என அவர் பற்றிய விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிறுவன் இறுதியாக இன்றைய தினம் அதிகாலை 3 மணிக்கு கோட் செயின்ட் லூஸ் பகுதியில் இருந்தார் என தெரிவிக்கப்படுகிறது.

ஒரு பையொன்றும் பாஸ்கெட் போல் ஒன்றும் கையில் வைத்திருந்தார் என குறிப்பிடப்படுகிறது.

சிறுவன் காணாமல் போனமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சிறுவன் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் கிடைக்கப்பெற்றால் 911 என்ற இலக்கத்திற்கு அல்லது உள்ளூர் பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

## திட்டமிடப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் குடியுரிமை பெற்றவர்களா என்ற விவரத்தை வெளியிடவில்லை

இவர்கள் இருவரும் இஸ்லாமிய அரச பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு உதவும் வகையில் சமீபத்தில் ஆயுதங்கள் கொள்வனவு செய்தனர் எனவும் பொலிஸ் குற்றம் சாட்டியுள்ளது.

இவர்கள் இருவரும் டொரன்டோவில் தீவிர வன்முறைத் தாக்குதலை திட்டமிட்டனர் எனவும் புதன்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பொலிஸார் கூறினர்.

ஆனாலும் அவர்களால் எதிர்கொள்ளப்பட்டிருக்கு கூடிய அச்சுறுத்தலின் தன்மை குறித்து தகவல் வெளியிட தடை உத்தரவு அமுலில் உள்ளது.




# மார்க்கம் பிரதேசத்தில் பெண் ஒருவர் கடத்தல்

ஒன்ராரியோ, ஓகஸ்ட்01

மார்க்கம் பகுதியில் பெண் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளார் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தப் பெண்ணைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

யோர்க் பிராந்திய பொலிஸார் இந்த விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். 57 வயதான யீங் ஸாங் என்ற பெண்ணே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

கடந்த 25 ஆம் திகதி இரவு 10.40 மணியளவில் இந்தப் பெண்ணை இறுதியாக கண்டதாகத் தெரிவிக்கப் படுகிறது.

ஸ்டீல்கேஸ் மற்றும் வுட்பீன் வீதிகளுக்கு அருகாமையில் இந்தப் பெண்ணை இறுதியாகப் பார்த்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பெண் தொண்டு நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.



இந்தப் பெண் காணாமல் போன சம்பவத்துடன் 26 வயதான சன் க்ளீன் என்பவர் தொடர்பு பட்டிருக்கின்றார் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டளள்ளது.

இந்தக் கடத்தல் சம்பவம் குறித்து தகவல்கள் தெரிந்தால் அதனை அறிவிக்குமாறு பொலிஸார் பொது மக்களிடம் கோரியுள்ளனர்.





# வயோதிப மாதிடம் மாதாந்த நீர்க் கட்டணம் 1,46,000 டொலர்கள் ஒரேயடியாக அறவீடு!

வின்னிபெக், ஓகஸ்ட்01

கனடாவின் வின்னிப்பிக் பகுதியில் சிரேஷ்ட பிரஜை ஒருவர் வசித்து வந்த வீட்டிற்கு மாதாந்த குடிதண்ணீர் கட்டணமாக 146,000 டொலர்கள் பட்டியலிடப்பட்டுள்ளது.

வழமையாக மாதாந்தம் 118 டொலர்கள் நீர் கட்டணப் பட்டியலாக தமக்கு கிடைக்கப்பெறும் என அவர் தெரிவிக்கின்றார்.

எவ்வாறு எனினும் திடீரெனத் தமது நீர் கட்டண பட்டியல் 1,46,000 டொலர்கள் ஆக பட்டியலிடப் பட்டுள்ளது என அவர் தெரிவித் துள்ளார்.

நீர் பட்டியலை பார்த்ததும் தாம் பெரும் அதிர்ச்சி அடைந்தார் என டொர்டி மாட்டின் என்ற வயோதிப பெண் தெரிவிக்கின்றார்.

தனது வங்கிக் கணக்கிலிருந்து இந்த நீர் கட்டணம் அறவீடு செய்யப் பட்டுள்ளதாக அவர் தெரிவிக்கின்றார்.

வங்கி கணக்கில் பெருந்தொகை பணம் குறைவடைந்ததை அவதானித்த தாம் அது குறித்து தேடிய போது நீர் கட்டணத்திற்காக இவ்வளவு பாரிய தொகை அறவீடு செய்யப்பட்டுள்ளமை தெரிய வந்தது என குறிப்பிடுகின்றார்.

தமது வழமையான நீர் கட்டணத்தை விடவும் ஆயிரம் மடங்கு அதிகளவு கட்டணம் பட்டியலிடப் பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

நீர்மானி வாசிப்பில் ஏற்பட்ட தவறு காரணமாக இவ்வாறு கூடுதல் தொகை அறவீடு செய்யப்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

# தாவரங்களை கொண்டு உற்பத்தி செய்யப்படும் பால் பானம் தொடர்பில் கனடாவில் எச்சரிக்கை

ஒன்ராரியோ, ஓகஸ்ட்01

கனடாவில் தாவரங்களை கொண்டு உற்பத்தி செய்யப்படும் பால் பானம் தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனடிய பொதுச்சுகாதார முகவர் நிறுவனம் இது தொடர்பிலான எச்சரிக்கையை விடுத்துள்ளது. இந்தப் பால் பான வகைகளில் லிஸ்ட்டிரியா எனப்படும் ஒருவகை பாக்டீரியா காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உடலுக்கு தீங்கு ஏற்படுத்தக்கூடிய இந்த பாக்டீரியா வகை ஆபத்தானது என அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவில் இதுவரையில் மொத்தமாக 18 பேர் இந்த லிஸ்ட்டிரியா தாக்கத்தினால் பாதிக்கப்பட்டனர் எனவும் இதில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒன்றாரியோ மாகாணத்தில் 12 பேரும், கியூபெக் மாகாணத்தில் நான்கு பேரும், அல்பேட்டா மற்றும் நோவா ஸ்கோஷியா ஆகிய மாகாணங்களில் தலா ஒருவரும் இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

7 வயது முதல் 89 வயது வரையிலானவர்கள் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளனர் எனவும் அதிக அளவிலானவர்கள் 50 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.




சில்க் பிராண்ட் ஆல்மண்ட், மில்க் கோகனட் மில்க் ஆல்மண்ட், கோகனட் மில்க், ஓட் மில்க் போன்ற பால் பான வகைகளில் இந்த பாக்டீரியா வகை தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 4ஆம் திகதி காலாவதியாகும் பால் உற்பத்தி பக்கட்டுகளில் இவ்வாறு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த பால்பான வகைகள் சந்தையில் இருந்து மீள பெற்றுக் கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இரண்டு பேர் இந்த பால் பானத்தை பருகியமையால் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும், உயிரிழந்தவர்கள் பற்றிய மேலதிக விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

இந்த பால்பான உற்பத்தியை பருகி இரண்டு மாதங்களின் பின்னரே நோய் தாக்கம் ஏற்படும் என்பதனால் இதனை கண்டறிவதில் சிரமங்கள் நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.




# போதை மருந்துப் பாவனையால் தினசரி பிரிட்டிஷ் கொலம்பியாவில் 6 பேர் பலி!

பிரிட்டிஷ் கொலம்பியா, ஒகஸ்ட்01

பிரிட்டிஷ் கொலம்பியாவில் போதை மருந்துப் பாவனை காரணமாக நாளொன்றுக்கு ஆறு பேர் உயிரிழக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மாகாணத்தில் இந்த ஆண்டின் முதல் ஆறு மாத காலப்பகுதியில் போதை மருந்து பயன்பாடுகள் காரணமாக 1,158 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

எனினும், இது கடந்த ஆண்டை விடவும் ஒன்பது வீதம் குறைவு என தெரிவிக்கப்படுகிறது.

நாள்தோறும் போதை மருந்து பயன்பாடு காரணமாக மரணங்கள் பதிவாகி வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மே மாதம் போதை மருந்து பயன்பாடு காரணமாக 181 பேரும், ஜூன் மாதம் 1985 பேரும் பிரிட்டிஷ் கொலம்பியாவில் கொல்லப்பட்டுள்ளனர்.

சராசரியாக மாகாணத்தில் நாளொன்றுக்கு சுமார் ஆறு மரணங்கள் பதிவாகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

போதை மருந்து மாத்திரைகள் விசமாகும் சந்தர்ப்பங்கள் வெகுவாக அதிகரித்துச் செல்வதாகவும் கூறப்படுகின்றது.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் அதிக எண்ணிக்கையிலானவர்கள் 10 முதல் 59 வயது வரையிலானவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

விபத்துக்கள், கொலைகள், தற்கொலைகள் இயற்கை, காரணிகள் போன்றவற்றின் மரண எண்ணிக்கையை விடவும் மித மிஞ்சிய போதை மருந்து பயன்பாடு காரணமான மரணங்களின் எண்ணிக்கை அதிகம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜூன் மற்றும் மே மாதங்களில் இவ்வாறு பதிவான மரணங்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் 30 முதல் 49 வயது வரையிலானவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

போதை மருந்து பயன்பாட்டினால் உயிரிழந்தவர்களில் சுமார் 72 வீதமானவர்கள் ஆண்கள் அவும் குறிப்பிடப்படுகிறது.

# கனடாவில் தம்மை சட்டத்தரணி என போலியாக வேடமிட்ட பெண் கைது

கனடாவின் கியூபெக் மாகாணத்தில் தன்னை சட்டத்தரணி எனப் போலியாக அடையாளப்படுத்திக் கொண்ட பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சில வாரங்களாக இந்தப் பெண் பொலிஸாரால் பிறப்பிக்கப்பட்ட பிடிவிறாந்து உத்தரவைத் தவிர்த்து வந்ததார் எனவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மெகன் லாலொன்டெ என்ற பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 8ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையச்குமாறு அப்பெண்ணுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

எனினும் அவர் நீதிமன்ற உத்தரவிற்கு அமைய செயற்படத் தவறினார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

டிக் டாக், இன்ஸ்டாகிராம் போன்ற பல்வேறு சமூக ஊடகங்களில் தன்னை ஒரு சட்டத்தரணி என இவர் அடையாளப்படுத்திக் கொண்டுள்ளார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனினும் அவர் சட்டத்தரணியாகச் செயல்படுவதற்கு அதிகாரம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் 18ஆம் இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வரையிலான காலப் பகுதிக்குள் இவர் சட்டத்தரணியாக தம்மை அடையாளப்படுத்தினார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.



ஆயினும் நீதிமன்ற உத்தரவிற்கு அமைய நீதிமன்றத்தில் முன்னிலையாக அவர் தவறியுள்ளார்.

இந்த நிலையில் அந்தப் பெண்ணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.



# கனடா காட்டுத் தீ அனர்த்தம் பிரித்தானிய மன்னர் கவலை

கனடாவில் ஏற்பட்ட காட்டு தீ தொடர்பில் பிரித்தானிய மன்னர் மூன்றாம் சார்ள்ஸும் அவரது பாரியார் கமீலாவும் தங்களது கவலையை வெளியிட்டுள்ளனர்.

ஜஸ்பர் தேசிய பூங்காவில் ஏற்பட்ட பாரிய காட்டு தீ அனர்த்தம் தொடர்பில் தாம் பெரும் கவலை கொண்டுள்ளார் என மன்னர் தெரிவித்துள்ளார்.

மிக அழகிய சுற்றுலா தலங்களில் ஒன்றான ஜாஸ்பர் தேசிய பூங்கா பகுதியில் பாரிய காட்டுத்தை ஏற்பட்டு பெரும் அழிவுகள் ஏற்பட்டுள்ளன.

இந்த விபத்து காரணமாக நேரடியாக பாதிக்கப்பட்டவர்கள், சொத்துக்களை இழந்தவர்கள், இருப்பிடங்களை விட்டு வெளியேற நேரிட்டவர்கள் போன்றவர்களுக்கு தனது கவலையை வெளியிடுகின்றார் என மன்னர் தெரிவித்துள்ளார்.



இதேவேளை, தீயை கட்டுப்படுத்துவதற்கு தன்னார்வ அடிப்படையில் பணி நிமித்தமும் பங்களிப்பு வழங்கிய அனைத்து நபர்களுக்கும் நன்றி பாராட்டுகின்றார் எனப் பிரித்தானிய மன்னர் மூன்றாம் சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.






# ஒலிம்பிக்கில் கனடாவுக்கு 7 ஆவது பதக்கம் கிட்டியது

ஒன்ராரியோ, ஓகஸ்ட்01

2024 பரிஸ் ஒலிம்பிக் போட்டியில் கனடா ஏழாவது பதக்கத்தை வெற்றி பெற்றுள்ளது.

ஆண்களுக்கான நீச்சல் போட்டியில் இலியா கருன் வெண்கலம் வென்றார்.

200 மீட்டர் பட்டர்பிளை நீச்சல் போட்டியில் அவர் இந்தப் பதக்கத்தை நேற்று புதன்கிழமை வென்றார்.

2012ஆம் ஆண்டுக்கு பின்னர் பட்டர்பிளை நீச்சல் பதக்கம் வென்ற முதல் கனடியர் இவராவார்.

இது பரிஸ் ஒலிம்பிக் போட்டியில் கனடா வெற்றி பெறும் ஏழாவது பதக்கமாகும்.

இதுவரை பரிஸ் ஒலிம்பிக் போட்டியில் கனடா இரண்டு தங்கம், இரண்டு வெள்ளி, மூன்று வெண்கலம் என மொத்தம் ஏழு பதக்கங்களை வென்றுள்ளது. பரிஸ் ஒலிம்பிக் போட்டியில் இம் முறை 32 விளையாட்டுகளில் 337 கனடிய விளையாட்டு போட்டியிடுகின்றனர்.

# கனடாவில் வயது முதிர்ந்தோருக்கு கொடுப்பனவுத் தொகை அதிகரிப்பு

கனடாவில் வயது முதிர்ந்தவர்களுக்கு கொடுப்பனவுத் தொகை அதிகரிக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முதியவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த கொடுப்பனவில் சிறிய அளவில் அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

நாட்டில் நிலவிவரும் பணவீக்க நிலைமைகளை கருத்தில் கொண்டு இவ்வாறு தொகை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது ஜூலை மாத கொடுப்பனவு 2.8 வீதத்தினால் உயர்த்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜூலை முதல் செப்டம்பர் மாதம் வரையிலான காலப்பகுதிக்கான வயது மூப்பு பாதுகாப்பு நலன்புரி கொடுப்பனவுத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜூலை மாதத்தில் இருந்து செப்டம்பர் மாதத்திற்கான கொடுப்பு உணவு 0.7 வீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.



கடந்த 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 75 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கொடுப்பனவுத் தொகை 10 வீதத்தினால் அதிகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வயது, கனடாவில் வாழும் காலம், பால் நிலை, அவர்களது வருமானம் உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையில் இந்தக் கொடுப்பனவுத் தொகை நிர்ணயம் செய்யப்படுகின்றது.

65 முதல் 74 வயது வரையிலானவர்களுக்கான நலன்புரி கொடுப்பனவுத் தொகை வழங்கப்பட உள்ளது. 65 முதல் 74 வயது வரை வரையிலான தகுதியான முதியவர்களுக்கு 718.33 டொலர்கள் வரையில் கொடுப்பனவுத் தொகை வழங்கப்பட உள்ளது.

75 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அதிகபட்சமாக 790.16 டாலர் வழங்கப்பட உள்ளது.



# கனடாவின் பொருளாதாரம் ஜூலையில் 0.2 வீத வளர்ச்சி

கனடியப் பொருளாதாரம் ஜூலை மாதத்தில் 0.2 சதவீதம் வளர்ச்சியடைந்தது.

கனடியப் புள்ளிவிவரத் திணைக்களம் நேற்றுப் புதன்கிழமை இதனை அறிவித்துள்ளது.

ஜூலை மாத மொத்த உள்நாட்டு உற்பத்தி அறிக்கையை கனடியப் புள்ளிவிவரத் திணைக்களம் புதன் காலை வெளியிட்டது.

ஜூலை மாதத்தில் பொருளாதாரம் 0.1 சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளதாக கடந்த மாதம் ஓர் ஆரம்ப மதிப்பீடு தெரிவித்தது.

ஆனாலும் எதிர்பார்ப்புக்கு மாறாக பொருளாதாரம் ஜூலை மாதத்தில் 0.2 சதவீதம் வளர்ச்சி அடைந்துள்ளது.

இரண்டாவது காலாண்டில், மொத்த உள்நாட்டு உற்பத்தி 2.2 சதவீத வருடாந்த வீதத்தில் வளர்ச்சி அடையும் என புள்ளிவிவரத் திணைக்களம் எதிர்பார்க்கிறது. பலவீனமான பொருளாதார நிலை மைகள் காரணமாக, கனடிய வங்கி இந்த மாத ஆரம்பத்தில் தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக வட்டி விகி தங்களைக் குறைத்தது குறிப்பிட்டத்தக்கது.

# கனடாவில் 448 பேரின் உடல் நலத்தை பாதித்த கிருமித்தொற்றின் பெரும் பரவல்

## குழந்தைகளின் உணவில் கிருமிகள் கலந்தது எப்படி?

கனடாவின் அல்பர்ட்டா மாகாணத்தில், கால்கரி நகரில் அமைந்துள்ள ஒரு குழந்தைகள் பகல் நேரக் காப்பகத்தில் துவங்கிய ஒரு மாபெரும் கிருமித் தொற்று 448 பேரைப் பாதித்தது.

கனடாவின் கால்கரி நகரில், ஈ கோலை என்னும் நோய்க்கிருமியின் தொற்றால் 448 பேர் பாதிக்கப்பட்டார்கள்.

அவர்களில் 38 பிள்ளைகள் மற்றும் ஒரு பெரியவரின் நிலைமை மோசமானதால், அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்படும் நிலை ஏற்பட்டது.

23 பேர் பயங்கர சிறுநீரக பாதிப்பால் பாதிக்கப்பட்டார்கள். சிறுநீரகத்திலுள்ள இரத்தக்குழாய்களில் கசிவு ஏற்பட்டு, சிறுநீரக செயலிழப்பு ஏற்படும் நிலை வர, அவர்களில் 8 பேருக்கு டயாலிசிஸ் சிகிச்சை அளிக்கவேண்டியதாயிற்று.

இந்த தொற்று, கால்கரி நகரில் அமைந்துள்ள ஒரு குழந்தைகள் பகல் நேரக் காப்பகத்திலிருந்து துவங்கியது.

ஆனால், குழந்தைகளின் உணவில் மோசமான கிருமிகள் கலந்தது எப்படி என்ற கேள்விக்கு சரியான பதில் கிடைக்கவில்லை.




அதாவது, எங்கிருந்து இந்த நோய்க்கிருமி பரவியது என்பது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், ஆயிரக்கணக்கானோருக்கு உணவு விநியோகிக்கும் ஒரு மைய சமையலறையிலிருந்து அந்த பாதிப்பு துவங்கியது தெரியவந்தது.

மாட்டிறைச்சி உணவு ஒன்றிலிருந்துதான் அந்தக் கிருமி பரவியிருக்கலாம் என்ற கருத்துக்கு ஆய்வாளர்கள் வந்தார்கள்.

ஆனால், அந்த இறைச்சியில் எங்கிருந்து அந்த மோசமான கிருமி வந்தது? இறைச்சியிலேயே கிருமி இருந்ததா அல்லது இறைச்சியில் கலக்கப்பட்ட பிற உணவுப்பொருள்களிலிருந்து அது வந்ததா, அல்லது உடல் நலம் பாதிக்கப்பட்டிருந்த பணியாளரின் சரியாக கழுவப்படாத கையிலிருந்து அது உணவுக்குப் பரவியதா என்பது தெரியவில்லை.

கிருமித் தொற்று பரவலுக்குப் பின், சம்பந்தப்பட்ட சமையலறை மூடப்பட்டது. பிறகு புதிய ஒப்பந்ததாரர் ஒருவர் பொறுப்பேற்க, மீண்டும் அந்த சமையலறை திறக்கப்பட்டுள்ளது.